# பத்திரிக்கை செய்தி

மேலாண்மை இயக்குநர்,தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,சென்னை அவர்களின் கடித ந.க.எண்:1853/HR/TNSRLM/2022, நாள்:20.06.2022-ன்படி திருப்பூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) மூலனூர்,திருப்பூர், பொங்கலூர், வெள்ளகோவில் ஆகிய வட்டாரங்களில் உள்ள தற்காலிக 4 வட்டார மேலாளர்கள் மற்றும் காங்கயம், பல்லடம்(3 காலிப்பணியிடம்), பொங்கலூர், குண்டடம், தாராபுரம், ஊத்துக்குளி(2காலிப்பணியிடம்), மற்றும் வெள்ளகோவில் ஆகிய வட்டாரங்களில் உள்ள தற்காலிக 10 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஆக மொத்தம் 14 நபர்கள் தற்காலிகமாக கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளது.

**I. வட்டார இயக்க மேலாளருக்கான பணிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :**

1. ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் கூடிய குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கான MS OFFICE சான்றிதழுடன் ஆன பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். (Computer Science மற்றும் Computer Applications பட்டப்படிப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
2. 28 வயதுக்குள் இருக்க வேண்டும்.
3.பெண் பாலினத்தவராக இருக்க வேண்டும்.
4. குறைந்த பட்சம் 3 வருடம் இதே போன்ற திட்டங்களில்(Similar Projects) பணிபுரிந்திருக்க வேண்டும்.
5. முன் அனுபவம் குறிப்பிட்டுள்ள காலத்தில் நற்பணியாற்றியிருக்க வேண்டும்.
6. பேச்சுத்திறன் மற்றும் தலைமைத்திறன் கொண்டிருக்க வேண்டும்.
7. திருப்பூர் மாவட்டத்திற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
8. இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இருத்தல் வேண்டும்.

**II. வட்டார ஒருங்கிணைப்பாளர் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

1. ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் கூடிய குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கான MS OFFICE சான்றிதழுடன் ஆன பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
2. 28 வயதுக்குள் இருக்க வேண்டும்.
3.பெண் பாலினத்தவராக இருக்க வேண்டும்.
4. குறைந்த பட்சம் 2 வருடம் இதே போன்ற திட்டங்களில்(Similar Projects) பணிபுரிந்திருக்க வேண்டும்.
5. முன் அனுபவம் குறிப்பிட்டுள்ள காலத்தில் நற்பணியாற்றியிருக்க வேண்டும்.
6. பேச்சுத்திறன் மற்றும் தலைமைத்திறன் கொண்டிருக்க வேண்டும்.

7. சம்மந்தப்பட்ட வட்டாரத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

8. இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இருத்தல் வேண்டும்.

**III. ஊதியம்**

1. வட்டார இயக்க மேலாளர் : ரூ.15,000/-
2. வட்டார ஒருங்கிணைப்பாளர் : ரூ.12,000/-

**IV. தேர்வு முறை :**

| தேர்வு நிலை | மதிப்பெண் | தேர்வு நடைபெறும் நாள் |
|---|---|---|
| 1. எழுத்துத் தேர்வு | 75 | 15.11.2022 |
| 2. நேர்முகத் தேர்வு | 25 | 21.11.2022 |

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ்கண்ட முகவரிக்கு,

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்டம்,
No.305, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
திருப்பூர் - 641 604
தொலைபேசி எண். 0421 - 2971149

நேரிலோ / தபால் மூலமாகவோ 10.11.2022-க்குள் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2/11/22

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருப்பூர் மாவட்டம்.

01/11/22